திண்டுக்கல்லில்

# தேசிய பூப்பந்தாட்ட போட்டி துவக்கம்

▶ திண்டுக்கல்லில் நடைபெற்ற தேசிய அளவிலான பூப்பந்தாட்ட போட்டியை கலெக்டர் சரவணன் துவக்கி வைத்தார்.

**திண்டுக்கல், செப். 26:** திண்டுக்கல்லில் தேசிய அளவிலான பூப்பந்தாட்ட போட்டி நேற்று பி.எஸ்.என்.ஏ., பொறியியல் கல்லூரியில் துவங்கியது.

தமிழ்நாடு பூப்பந்தாட்ட கழகம் மற்றும் திண்டுக்கல் பூப்பந்தாட்ட கழகம் சார்பில் 44வது சப் ஜூனியர் மற்றும் 71வது சீனியர் பிரிவுக்கான தேசிய அளவிலான பூப்பந்தாட்ட போட்டி நேற்று துவங்கியது. பிஎஸ்என்ஏ கல்லூரி முதன்மை சேர்மன் ரகுராம் தலைமை வகித்தார். கல்லூரி அறங்காவலர் சூர்யா ரகுராம், இந்திய பூப்பந்து கூட்டமைப்பின் பொது செயலாளர் ராஜா ராவ், மாநில பூப்பந்தாட்ட கழக பொது செயலாளர் விஜய், மாநில தலைவர் நடேசன், உதவி தலைவர் சீனிவாசன், நாராயணன் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கலெக்டர் சரவணன் போட்டியை துவக்கி வைத்து வாழ்த்துரை வழங்கினார்.

தமிழ்நாடு பூப்பந்து விளையாட்டு வீரர் பரமசிவம் ஒலிம்பிக் தீபத்தை ஏந்தி வந்தார். இதில் சப் ஜூனியர், சீனியர் பிரிவு ஆண்கள் மற்றும் பெண்கள் என தனித்தனியாக போட்டிகள் நடைபெற்றது. இப்போட்டியில் சப் ஜூனியர் பெண்கள் பிரிவில் 21 மாநில அணிகளும், ஆண்கள் பிரிவில் 21 மாநில அணிகளும் மற்றும் சீனியர் பெண்கள் பிரிவில் 29 மாநில அணிகளும், ஆண்கள் பிரிவில் 27 மாநில அணிகளும் என 1600க்கு மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர். நான்கு நாட்கள் நடைபெறும் இப்போட்டியில் ஞாயிற்றுக்கிழமை இறுதி போட்டி நடைபெறுகிறது. போட்டியில் வெற்றி பெறும் வீரர்களுக்கு பரிசுகள், கேடயங்கள் வழங்கப்படுகிறது.

மேலும் சிறந்த விளையாட்டு வீரர்களுக்கு ஸ்டார் ஆப் இந்தியா விருது வழங்கப்படுகிறது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் வாசுதேவன், தடகள சங்க பொருளாளர் துரைராஜ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

திண்டுக்கல்லில் நாளை

# அண்ணா பிறந்தநாள் சைக்கிள் போட்டி

## மாணவர்கள் பங்கேற்க அழைப்பு

**திண்டுக்கல், செப். 26:** திண்டுக்கல் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட அளவிலான பள்ளி மாணவ, மாணவிகளுக்கான சைக்கிள் போட்டி நாளை நடைபெறவுள்ளது என மாவட்ட விளையாட்டு அலுவலர் சிவா தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது: தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம் சார்பில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாளை முன்னிட்டு மாவட்ட அளவிலான பள்ளி மாணவ, மாணவிகளுக்கான சைக்கிள் போட்டி நாளை (செப்.27ம் தேதி, சனிக்கிழமை) காலை 7 மணிக்கு திண்டுக்கல் மாவட்ட விளையாட்டு அரங்கத்தில் நடைபெற உள்ளது. இதில் 13 வயதிற்குள் மாணவர்கள் 15 கி.மீ, மாணவியர்கள் 10 கி.மீ, 15 வயதிற்குள் மாணவர்கள் 20 கி.மீ, மாணவியர்கள் 15 கி.மீ, 17 வயதிற்குள் மாணவர்கள் 20 கி.மீ, மாணவியர்கள் 15 கி.மீ செல்ல வேண்டும். அண்ணா பிறந்த நாள் சைக்கிள் போட்டியில் பங்கு பெற விருப்பம் உள்ள மாணவ, மாணவிகள் இந்தியாவில் தயாரான சாதாரண சைக்கிளை மட்டுமே பயன்படுத்த வேண்டும். மேலும் பள்ளி தலைமையாசிரியர், ஆசிரியையிடம் வயது சான்றிதழ் கண்டிப்பாக பெற்று வர வேண்டும்.

இப்போட்டிகளில் ஒவ்வொரு பிரிவுகளிலும் முதல் இடம் பெறுபவர்களுக்கு ரூ.5000, இரண்டாம் இடம் பெறுபவர்களுக்கு ரூ.3000, மூன்றாமிடம் பெறுபவர்களுக்கு ரூ.2000, மற்றும் நான்கு முதல் பத்தாம் இடம் வரை பெறுபவர்களுக்கு ரூ.250 வீதம் பரிசு தொகை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு மாவட்ட விளையாட்டு அலுவலரை நேரிலோ அல்லது 7401703504 என்ற அலைபேசி எண்ணில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

நிலக்கோட்டை தும்மலப்பட்டியில்

# மக்கள் ஆர்வமுடன் மனுக்கள் அளிப்பு

▶ நிலக்கோட்டை ஒன்றியம் நூத்தலாபுரம் ஊராட்சி தும்மலப்பட்டியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது.

**நிலக்கோட்டை, செப். 26:** நிலக்கோட்டை ஒன்றியம் நூத்தலாபுரம் ஊராட்சிக் குட்பட்ட தும்மலப்பட்டி கிராமத்தில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. வட்டார வளர்ச்சி அலுவலர் குமாரவேல் தலைமை வகித்தார். வட்டாட்சியர் விஜயலெட்சுமி, உதவி திட்ட அலுவலர் முத்துப்பாண்டி, வட்டார வளர்ச்சி அலுவலர் மாணிக்கம் முன்னிலை வகித்தனர். ஊராட்சி செயலர் முஹமது அத்தீப் வரவேற்றார்.

இம்முகாமில் விராலிபட்டி, குளத்துப்பட்டி, தும்மலப்பட்டி உள்ளிட்ட 10க்கும் மேற்பட்ட கிராமங்களை சேர்ந்த பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்டு தங்களது கோரிக்கை மனுக்களை அளித்தனர். தொடர்ந்து பெறப்பட்ட 600க்கும் மேற்பட்ட மனுக்கள் அந்தந்த துறை அலுவலர்களால் உடனுக்குடன் ஆன்லைனில் பதிவு செய்யப்பட்டன. பின்னர் 25க்கும் மேற்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காணப்பட்டு அதற்கான பட்டா மாறுதல், சாதி சான்றிதழ், தற்காலிக மின் இணைப்பு, இருப்பிட சான்றிதழ், பெயர் மாற்றம், வருமான சான்றிதழ் உள்ளிட்டவை பயனாளிகளிடம் திமுக மேற்கு ஒன்றிய செயலாளர் கரிகாலபாண்டியன் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மண்டலதுணை வட்டார வளர்ச்சி அலுவலர்லதா மகேஸ்வரி, கட்சி நிர்வாகிகள் ஜான் போஸ்கோ, பாலசந்திரன், செல்வம், மலையாளம், வேல்முருகன், கந்தபிரபு, ஸ்டாலின் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# பயறுகளில் அதிக மகசூல் பெறும் வழிமுறைகள்

வேளாண் துறை அட்வைஸ்

**பழநி, செப். 26:** பயறு வகைகளில் அதிக மகசூலை பெறும் வழிமுறைகள் குறித்து வேளாண் அதிகாரிகள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

இதுகுறித்து அவர்கள் தெரிவித்ததாவது: உளுந்து பயிர் சாகுபடிக்கு ஆடுதுறை 3, வம்பன் 5, ஆடுதுறை 5, பாசிப்பயறு சாகுபடிக்கு ஆடுதுறை 3, வம்பன் 3 ஆகிய ரகங்கள் ஏற்றவை. விதை அளவை பொறுத்தளவில் எக்டருக்கு 25 கிலோ என்ற அளவில் விதைகளை நேர்த்தி செய்து பயன்படுத்தலாம். பயிர்கள் நன்கு வளரவும், காற்றில் உள்ள தழைச்சத்து செடிகளுக்கு கிடைக்கவும் விதைப்பதற்கு முன் ஒரு எக்டருக்கு தேவையான விதையுடன் 600 கிராம் ரைசோபியம் உயிர் உரத்தை அரிசி கஞ்சியுடன் கலந்து நிழலில் உலர்த்தி விதைக்க வேண்டும்.

நெல் அறுவடைக்கு சில நாட்களுக்கு முன்பாக மண்ணில் உள்ள ஈரம் சரியான பதத்தில் இருக்கும். உளுந்து அல்லது பாசிப்பயறு விதைகளை நேரடியாக விதைக்க வேண்டும். பயறு வகை பயிர்களுக்கு தழைச்சத்தை விட மணிச்சத்து அதிகமாக தேவைப்படுகிறது. இதற்கு இலை வழி உரமிடுதல் அவசியம். இலை வழி உரமளிப்பதற்கு டிஏபி 2 சதவீதம் உரக்கரைசல், பயறு ஒன்டர் ஆகியவற்றை பயன்படுத்தலாம். மகசூலை அதிகரிக்க செய்ய உயர் விளைச்சல் ரகங்களை பயன்படுத்த வேண்டும். ஒருங்கிணைந்த உர நிர்வாகம் மேற்கொள்ள வேண்டும். 27 டிஏபி கரைசலை தெளிக்க வேண்டும். தெளிப்பு நீர் பாசனத்தை பயன்படுத்தி சாகுபடி செய்ய வேண்டும். பயறு வகை பயிர்களில் செடிகளில் பூக்கள் உதிர்வதால் காய்பிடிப்பு குறைந்து விதை உற்பத்தியும் குறைந்து விடுகிறது. இதனை தடுக்க 50 சதவீதம் பூக்கள் பூக்கும் பருவத்தின் போது

லிட்டருக்கு 4 மி.லி என்ற அளவில் பிளானோபிக்ஸ் என்ற வளர்ச்சி ஊக்கியை, 100 மில்லி சாலிசிலிக் அமிலத்தை கலந்து கைத்தெளிப்பான் மூலம் தெளிக்கவும். தேவைப்பட்டால் விதைத்த 30 நாட்களுக்கு பின்னர் அதிகமாக உள்ள களைகளை ஒரு முறை கையால் பிடுங்கி அப்புறப்படுத்தலாம். அல்லது முளைத்துள்ள களைகளை பன்னரிவாள் கொண்டு நீக்கலாம். காய்கள் 80 சதவீதம் முதிர்ச்சி அடைந்தவுடன் செடிகளை அறுத்து வெயிலில் காய வைக்க வேண்டும். பின்பு கையினாலோ அல்லது எந்திரங்களை கொண்டு பயிரை பிரித்து எடுக்கலாம். இவ்வாறு தெரிவித்தனர்.

மழைக்காலங்களில் ஏற்படும்

# மின் விபத்துக்களில் இருந்து தப்புவது எப்படி?

## மின்வாரிய அதிகாரிகள் ஆலோசனை

**திண்டுக்கல், செப். 26:** மழைக்காலங்களில் ஏற்படும் மின் விபத்துக்களில் இருந்து தப்பிக்க பின்பற்ற வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகள் குறித்து மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

மழை, வெள்ளம், இடி, மின்னல் ஆகிய இயற்கை இடர்பாடுகளின்போது ஏற்படும் மின் விபத்துக்களில் இருந்து பொதுமக்கள் தங்களை பாதுகாத்துக் கொள்ளும் பொருட்டு வீடுகளிலும் சுற்றுப்புறத்திலும் பின்பற்ற வேண்டிய பாதுகாப்பு வழிமுறைகளை மின்வாரியம் தெரிவித்துள்ளது. மின் கம்பத்திலோ அவற்றைத் தாங்கும் கம்பிகளிலோ கால்நடைகளை கட்டக்கூடாது. விளம்பர பலகைகளைக் கட்டக்கூடாது. மழையாலும், பெருங்காற்றாலும் அறுந்து விழுந்த மேல்நிலை மின்சார கம்பி அருகே செல்லக்கூடாது. அவ்வாறு இருக்கும் பட்சத்தில் அதைக் குறித்து அருகில் உள்ள மின்வாரிய அலுவலகத்திற்கு உடனடியாகத் தகவல் தெரிவிக்க வேண்டும். தகவல் தெரிவிப்பதுடன் மின் ஊழியர்கள் வரும்வரை காத்திருந்து வேறு நபர்கள் யாரும் தொடாமல் பார்த்துக்கொள்ள வேண்டும். மின்னல் ஏற்படும் போது வெட்ட வெளியிலோ, மரங்களின் அடியிலோ மின் கம்பங்கள் மின்கம்பிகள் அருகிலோ தஞ்சம் அடையக்கூடாது. பாதுகாப்பான கான்கீரிட் கட்டிடங்களில் மட்டுமே தஞ்சம் அடையலாம், மழைக்காலங்களில் மின்மாற்றிகள், மின்கம்பங்கள், வயர்கள் ஆகியவற்றின் அருகே செல்லக்கூடாது. பொதுமக்கள் ஐ.எஸ்.ஐ முத்திரை பெற்ற தரமான மின் சாதனங்களை மட்டுமே வாங்கிப் பயன்படுத்தி மின்கசிவு, மின்விபத்துக்களை தவிர்த்துக் கொள்ள வேண்டும். மின் கசிவுகளை கண்டறிந்து உடனடியாக மின்சாரத்தை நிறுத்தி விபத்துக்களை தடுக்க உதவும் கருவியான ஈஎல்சிபி.யை வீடு, கடை, கோவில் மற்றும் பள்ளிகளில் பொருத்த வேண்டும். மின்சார கம்பத்தில் கொடிகட்டி துணி காய வைப்பது கூடாது. ஒவ்வொரு வீட்டிற்கும் சரியான நில இணைப்பு (எர்த் பைப்) போடுவதுடன் அதனைக் குழந்தைகள் விலங்குகள் தொடாத வகையில் அமைத்து சரியாக பராமரிக்க வேண்டும். திருவிழாக்கள் மற்றும் கோவில் கொடை நிகழ்ச்சிகளில் தேர் பவனி மற்றும் சப்பரத்தை இரும்பு கம்பினாலோ மற்றும் இதர பொருட்களினாலோ தூக்குவதை தவிர்க்க வேண்டும்,

விவசாய நிலங்களில் மின் வேலி அமைப்பது சட்டப்படி குற்றமாகும். அவ்வாறு அமைக்கப்பட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் மேற்கண்ட பாதுகாப்பு வழிமுறைகளை பின்பற்றி மின் விபத்துக்களில் இருந்து தப்பிக்க வேண்டும் என மின்வாரிய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சூரியன் பதிப்பகம்
பெருமையுடன் வழங்கும் கையேடுகள்
TNPSC II & IIA தேர்வில் வெற்றி பெற...
TNUSRB, TNFUSRC நடத்துகின்ற தேர்வுகளுக்கான கைடுகள்
பொது அறிவு பாடக்குறிப்புகள் மற்றும் மாதிரி வினா-விடைகள் அடங்கிய கையேடுகள்...
பொதுத்தமிழ் மற்றும் கட்டாயத்தமிழ் தகுதித் தேர்வுக்கான சிறந்த வழிகாட்டி கையேடு...
₹1500/- (PART I & II)
₹335/-
இரண்டாம் நிலை காவலர் தேர்விற்கான சிறந்த கையேடு!
₹675/-
(இரண்டாம் நிலை காவலர், இரண்டாம் நிலை சிறைக்காவலர் மற்றும் தீயணைப்பாளர்)
QR code-ஐ ஸ்கேன் செய்து Payment செலுத்திவிட்டு, Payment செய்த ஸ்கிரீன் ஷாட்டையும் கொரியர் செய்வதற்கான முகவரி மற்றும் மொபைல் எண்ணையும் சேர்த்து 9840224816 என்ற WhatsApp நம்பருக்கு அனுப்பி உங்கள் ஆர்டரை உறுதி செய்து கொள்ளவும்.
மணியார்டர் மற்றும் டிமாண்ட் டிராஃப்ட் அனுப்புபவர்கள் சூரியன் பதிப்பகம், எண் 229, கச்சேரி ரோடு, மயிலாப்பூர், சென்னை - 4. என்ற முகவரிக்கு அனுப்பவும். போன்: 044 - 4220 9191
மேலும் விவரங்களுக்கு... 72990 27361 | 74487 28022

கொடைக்கானலில்

# மதி அங்காடி நடத்த மகளிர் குழு விண்ணப்பிக்கலாம்

**திண்டுக்கல், செப். 26:** கொடைக்கானலில் மதி அங்காடி நடத்துவதற்கு மகளிர் சுயஉதவி குழுக்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகிறது என கலெக்டர் சரவணன் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் தெரிவித்ததாவது: மகளிர் சுய உதவிக்குழுக்களின் உற்பத்தி பொருட்களை சந்தைப்படுத்துவதற்கு தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் பல்வேறு நடவடிக்கைகள் எடுத்து வருகிறது. இதன் ஒரு பகுதியாக திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானலில் கலையரங்கம் மெயின் ரோடு அருகில் அமைக்கப்பட்டுள்ள மதி அங்காடியை நடத்துவதற்கு மகளிர் சுயஉதவி குழுக்களிடமிருந்து விண்ணப்பங்கள் பெற்று அவற்றில் தகுதியான சுயஉதவி குழு தேர்வு செய்யப்படவுள்ளது.

அங்காடி அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்பு பகுதியில் உள்ள சுயஉதவி குழு கூட்டமைப்பு மட்டுமே தேர்வு செய்யப்படும். தகுதியுள்ள சுயஉதவி குழுக்கள் இல்லை எனில் சம்பந்தப்பட்ட குழு கூட்டமைப்பு தீர்மானத்தின் அடிப்படையில் மதி அங்காடி அமைந்துள்ள உள்ளாட்சி அமைப்புக்கு அருகாமையில் உள்ள வேறு மகளிர் குழுவினரை தேர்வு செய்யப்படும். தேர்வு செய்யப்படும் மகளிர் சுயஉதவி குழு, அப்பகுதியில் அமைந்துள்ள ஊராட்சி அளவிலான, பகுதி அளவிலான கூட்டமைப்பில் உறுப்பினராக இருத்தல் வேண்டும். தேர்வு செய்யப்படும் சுயஉதவி குழு தேசிய ஊரக, நகர்ப்புற வாழ்வாதார இணையத்தில் பதிவு பெற்றிருத்தல் அவசியம். பொருட்கள் உற்பத்தி, விற்பனையில் ஆர்வம் மற்றும் முன் அனுபவம் உடைய சுய உதவிக் குழுக்களாக இருத்தல் வேண்டும். மாற்றுத்திறனாளி நலிவுற்றோர் சுயஉதவி குழுக்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். விண்ணப்பிக்கும் சுயஉதவி குழு

தர மதிப்பீட்டில் தேர்ச்சி பெற்று இருப்பதுடன், குறைந்தது ஒரு வங்கி கடன் இணைப்பாவது பெற்றிருத்தல் வேண்டும். சுயஉதவி குழு தொடங்கி ஓராண்டு பூர்த்தி செய்திருக்க வேண்டும். சுயஉதவி குழு மீது எந்தவித புகார்களும் இல்லை என்பதற்கான சான்றினை சம்மந்தப்பட்ட வட்டார இயக்க மேலாளர், சமுதாய அமைப்பாளரிடமிருந்து பெற்று விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும். தேர்வு செய்யப்படும் சுயஉதவி குழு உரிமை கொண்டாட இயலாது. மதி அங்காடியின் உரிமை மாவட்ட வழங்கல் மற்றும் விற்பனை சங்கத்திடமே இருக்கும். அங்காடி நடத்துவதற்கான வாய்ப்பு 6 மாதங்களுக்கு மட்டுமே வழங்கப்படும். சுயஉதவி குழுவின் விற்பனை அளவு மற்றும் செயல்பாட்டு திறன் அடிப்படையில் தொடர்ந்து மதி அங்காடி நடத்த அனுமதி வழங்குவது குறித்து பரிசீலிக்க மாவட்ட அளவிலான குழுவால் இறுதி முடிவு எடுக்கப்படும்.

எனவே, விதிமுறைகளின்படி தகுதியான சுயஉதவி குழு உறுப்பினர்கள் தங்களுடைய விண்ணப்பங்களை இணை இயக்குநர், திட்ட இயக்குநர், தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம், (மகளிர் திட்டம்) மாவட்ட கலெக்டர் அலுவலகம், திண்டுக்கல் என்ற முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரிலோ அக்.7ம் தேதிக்குள் விண்ணப்பித்து பயனடையலாம். இவ்வாறு தெரிவித்துள்ளார்.

**க்ரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்**
(முன்னர் பூனாவால்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட், என அறியப்பட்டது)
பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா ட்ரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: 2 ஆவது தளம், டிகேஸ் டவர்ஸ், எண்.P/1/45/4, தேனி - கம்பம் மெயின்ரோடு, டீன்இபி எதிரில், பழனிச்செட்டிபட்டி, தேனி மாவட்டம், தேனி, தமிழ்நாடு-625531
மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை

**பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.**

இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமீன்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றறியப்பட்டது. பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பெனி என்ற பெயருடைய நிறுவனத்துடன் இணைக்கப்பட்டது) (இதற்குப் பிறகு கடனீட்டு கடனீந்தோர் என்று சட்டத்தின்படி குறிப்பிடப்படும்) அதிகாரப்பூர்வ அதிகாரியால், பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 பிரிவு 13 (12) இன் படியும், கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டத்தின் பிரிவு 13(2) மற்றும் விதிகள் 8&9 இன் கீழ் அளிக்கப்பட்ட அதிகாரத்தின்படி கவரதீமம் செய்குள்ளார். கடனீட்டு சொத்துகள் **அவை எங்கே உள்ளதோ, என்ன உள்ளதோ, அதே அடிப்படையில் 13.10.2025 தேதியன்று** மின்-ஏலம் மூலமாக விற்பனை செய்யப்படும். இதன் மூலம் பொது மக்களுக்குத் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், மின்- ஏல இயங்குதளத்தில் அதன் இணையதள லிங்க்கில் அதாவது, https://www.bankeauctions.com மூலமாக மின்-ஏலம் நடைபெறும். விற்பனையின் விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்/கடனீட்டு கடனீந்தோரின் இணையதளம் அதாவது, www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.

| வ. எண். | முன்மொழிவு எண். வாடிக்கையாளர் பெயர் (A) | கோரிக்கை அறிவிப்பு தேதி மற்றும் நிலுவைத்தொகை (B) | சுவாதீன தன்மை (C) | சொத்தின் விவரம் (D) | நிர்ணய விலை (E) | முன்வைப்புத் தொகை (நி.வி.-ல் 10%) (F) | முன்வைப்புத் தொகை செலுத்தும் தேதி (G) | ஏல உயர்வுத் தொகை (H) | சொத்தை பார்வையிடும் தேதி மற்றும் நேரம் (I) | ஏலத் தேதி மற்றும் நேரம் (J) | தெரிந்த விண்ணங்கள் / நீதிமன்ற வழக்குகள் தெரிந்தது ஏதேனும் (K) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | கடன் எண்: HL004941000000050 35955 செல்வம் குருவன் (கடன்தாரர்), அஜய் S (உப கடன்தாரர்) | கோரிக்கை அறிவிப்பு தேதி: 07.01.2025 மொத்த நிலுவைத் தொகை: 07.01.2025 தேதியின்படி ரூ. 20,98,826/- (ரூபாய் இருபது லட்சத்து தொன்னூற்று எட்டாயிரத்து எண்ணூற்று இருபத்தாறு மட்டும்) மற்றும் பணப்பட்டுவாடா வரையிலான ஆண்டு வட்டி 13.50 % உட்பட. | கையக | தேனி மாவட்டம், பெரியகுளம் பதிவு மாவட்டம், தேனி சார் பதிவு அலுவலகம், தேனி வட்டம், கொடுவிலார்பட்டி கிராமம், சர்வே எண்.1/1 பகுதி, எல்லம்டி திட்டம், மனை எண்.L 2–6, இல் உள்ள 72.00 ச.மீட்டர் பரப்பளவு உள்ள வீட்டு மனையில் (கிழக்கு– மேற்கு: 6 மீட்டர், தெற்கு–வடக்கு: 12) விண்ணப்பதாரர் ஆர்சிசி வீட்டு கட்டிடம் கட்டியுள்ளார். அது மின்வாரிய இணைப்பு மற்றும் வழக்கமான நடைபாதை உரிமைகள் மற்றும் அனைத்து வசதிகளும் உள்ள சொத்து. **மனையின் எல்லைகள்: கிழக்கில்:** பூங்கா, **மேற்கில்:** மனை எண்.எல்2–5, **வடக்கில்:** மனை எண். L 2–7, **தெற்கில்:** 6 மீட்டர் சாலை. | RS. 1800000/- (ரூபாய் பதினெட்டு லட்சம் மட்டும்) | Rs. 180000/- (ரூபாய் ஒரு லட்சத்து எண்பதாயிரம் மட்டும்) | 30.09.2025 மாலை 5 மணிக்கு முன்பாக | 10,000/- | 27/09/2025 (11AM – 4PM) | 13/10/2025 (11 AM- 2PM) | ஏதுமில்லை |

**ஆர்வமுள்ள ஏலதாரர்கள்/கொள்முதலாளர்கள் ஏலப்புள்ளி சமர்ப்பிப்பதற்கு முன்பாக ஏலச்சொத்துகள் தொடர்பான விவரங்கள் மற்றும் கூடுதல் கடனாங்கள், வில்லங்கங்கள், மூன்றாம் நபர் கோகுரிமைகள் போன்ற சொத்து தொடர்பான விவரங்களை தெரிந்து கொள்ள அருகில் உள்ள கடனீட்டு கடனீந்தோர் கிளைக்குச் சென்றோ அல்லது தாங்களாகவே எல்லா அம்சங்களையும் கணக்கில் எடுத்துக் கொண்டு தெரிந்து கொண்டு திருப்தியுற வேண்டும். சொத்து தொடர்பான சொத்து வரி, மின்சாரம்/தண்ணீர் ஆகியவற்றுக்கு செலுத்த வேண்டிய கடனாங்கள் மற்றும் பிற கடனாங்கள் உள்பட எந்தவிதமான செலவுகளையும் வெற்றிகரமான ஏலதாரரே ஏற்க வேண்டும்.**
ஆர்வமுள்ள ஏலதாரர்கள் மின்-ஏலத்துக்கு தேவையான பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் C1 இந்தியா பிரைவேட் லிமிடெட், முகவரி: மனை எண்.68, 3 ஆவது தளம், கூர்கயான், ஹரியானா–122003, உதவி எண்: 7291981124,25,26 உதவும் மின்னஞ்சல் முகவரி: Support@bankeauctions.com மூலமாகவோ, தொடர்பு நபர்: தாரணி P, மின்னஞ்சல் முகவரி: dharani.p@c1india.com, தொடர்பு எண்.9948182222 மூலமாகவோ தொடர்பு கொண்டு அவர்களிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். மின்–ஏலம் செயல்பாடு மீதான ஆன்லைன் பயிற்சியை அவர்களிடம் இருந்தே பெற வேண்டும். ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ ஏலதாரர்கள் அவர்களுடைய ஏல முன்வைப்புத் தொகையை (EMD) NEFT/RTGS/DD மூலமாக க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் ஆக்சன் புரசீட்ஸ் அக்கவுண்ட், ICICI BANK LTD, கணக்கு எண்.091551000028 மற்றும் IFSC Code– ICIC0000915, ஐசிஐசிஐ பேங்க் லிமிடெட், பன்ஜ்சில் டெக் பார்க், கணபதி சௌக் அருகில், 43/44, விமன் நகர்–411014 என்ற கிளையில் செலுத்தத்தக்கவிதமாக ஏதேனும் தேசிய வங்கியிலோ அல்லது செட்யூல்டு வங்கியிலோ 30.09.2025 ஆம் தேதி அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ செலுத்த வேண்டும். மேலும் https://www.bankeauctions.com இணையதளம் வழியே தங்கள் லாக்இன் அடையாள முகவரி மற்றும் கடவுச்சொல் மூலம் இல் பெயரை முன்னதாகவே பதிவு செய்து கட்டணமில்லா மின்–ஏல பயிற்சி பெற பயனாளர் அடையாள முகவரி, கடவுச் சொல் ஆகியவற்றை சேவை வழங்குநரிடம் இருந்து பெற்றுக் கொள்ள வேண்டும். அதன் பிறகு ஆர்வமுள்ள கொள்முதலாளர்/ஏலதாரர்கள் கீழ்வரும் ஆவணங்களை சுயசான்றளிக்கப்பட்ட போன்றவற்றை மின்னஞ்சல் மூலமாகப் பதிவேற்றம் செய்ய வேண்டும். அவற்றின் மூல பிரதியை இரண்டாவது தளம், டிகேஸ் டவர்ஸ், எண்.பி/1/45/4, தேனி–கம்பம் பிரதான சாலை, டீன்இபி எதிரில், பழனிச்செட்டிபட்டி, தேனி மாவட்டம், தேனி, தமிழ்நாடு–625531, மேலும் கைபேசி எண். +91 9597907666, மின்னஞ்சல் முகவரி baskaran.soudararajan@grihumhousing.com. தொடர்பு கொள்ள வேண்டும். மின்–ஏலத்தில் பங்கேற்பதற்கான விரிவான நிபந்தனைகள் மற்றும் விதிமுறைகளை தெரிந்து கொள்ள https://www.bankeauctions.com & www.grihumhousing.com- ஐ பார்வையிடவும்.
**கடனீட்டு சொத்துகளின் (அமலாக்கம்) சட்டம்-2002 இன் விதி 8(6) இன் கீழ் கடன்தாரர்/ உப - கடன்தாரர் / அடமானதாரர்கள்/ ஜாமீன்தாரர்களுக்கு வழங்கப்படும் இந்த அறிவிப்பானது 15 நாள்கள் அறிவிப்பு என்று கருதத்தக்கதாகும்.**
உள்ளூர் மொழி வெளியீட்டில் அல்லது ஆங்கில செய்தித்தாள் வெளியீட்டில் உள்ளடக்கங்களில் ஏதேனும் வித்தியாசம் இருந்தால் பிசினஸ் ஸ்டாண்டர்டு ஆங்கில செய்திதாளில் வெளியிடப்பட்ட உள்ளடக்கமே ஏற்றுக் கொள்ளக் கூடியதாகும்.
நாள்: 26.09.2025, இடம்: தமிழ்நாடு
ஒம்/- அதிகாரப்பூர்வ அலுவலர், க்ரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிட., என்றறியப்பட்டது)

விற்பனை மற்றும் புதிய சந்தா தொடர்பான விவரங்களுக்கு... தினகரன் 8904156777 9.30 AM - 6.00 PM